பக்கங்கள்:-27

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 06 | வெள்ளிக்கிழமை | 20.02.2026 | அதிர்வு 204

## அநுரகுமார அரசாங்கத்திலும் குர்ஆனை விடுவிக்க முடியாதா?

### ரிசாட் பதியுதீன் கேள்வி



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்திலும் குர்ஆனை விடுவிக்க முடியதா என நாடாளுமன்ற

06



# ராஜபக்ஷக்கள் கொலையாளிகள் அல்லர் என்பதை நிரூபித்துவிட்டார் பொன்சேகா

## இப்படி நாமல் பதிலடி





இறுதிப் போரின் போது விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைவது தொடர்பாக பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா வெளியிட்டுள்ள கருத்துக்கள் புதியவை அல்ல எனவும், ராஜபக்ஷக்கள் கொலையாளிகள் அல்லர் என்பதை அவரே இப்போது நிரூபித்துள்ளார் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துவெளியிடும் போதே அவர் இதனைத் குறிப்பிட்டார்.

06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி கட்சியின் அரசியல் குழுவினால் சிறிதரனிடமிருந்து பறிக்கப்பட்டு, தற்காலிகமாக இரா. சாணக்கியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தப் பொறுப்பை கடந்த சில வாரங்களாக அவர் ஆற்றி வருகின்றார். அது தொடர்பில் அவரது தெளிவான தலைமைத்துவப் பண்பு நேற்று நாடாளுமன்றில் வெளிப்பட்டது.

அவருக்கும் சிறிதரனுக்கும் இடையில் தனிப்பட்ட முரண்பாடு உச்சம். உட்கட்சிக் கூட்டங்களில் கூட இருவரும் கருத்து ரீதியில் மோதிக் கொள்வார்கள். நாடாளுமன்றத்தில் இருவருமே முன் வரிசையில் அருகருகே அமர்ந்திருந்தாலும் கூட, சபை நடவடிக்கை வேளையிலோ அல்லது வெளியிலோ இருவரும் உரையாடிக் கொண்டிருப்பதைக் கூடக் காணமுடிவதில்லை. அவ்வளவு தூரம் இருவருக்கும் இடையே முரண்பாடு முற்றியுள்ளது.

இந்த நிலையில்தான் கடந்த இரண்டு, 06





# எவரையும் கைவிடாத AI தொழில்நுட்பம்!

## புதுடில்லியில் அநுர அதிரடிப் பிரகடனம்

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில் நுட்பமானது எவரையும் கைவிடாத வகையிலும், நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டும் அமைவதை உறுதிப்படுத்த இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

புதுடில்லியில் நடைபெற்று வரும் 'AI Impact 2026' மாநாட்டின் அரச தலைவர்கள் அமர்வில் நேற்று வியாழக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பிரேசில் ஜனாதிபதி லூலா டி சில்வா உள்ளிட்ட உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



### பிராந்திய ஒத்துழைப்பு

செயற்கை நுண்ணறிவுத் துறையில் இலங்கை தனித்து வெற்றியீட்டுவதை நோக்கமாகக் கொள்ளவில்லை எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இதனைப் பொருளாதார மற்றும் கலாசார ஒத்து

தொடர்ச்சி▼







# எவரையும் கைவிடாத AI தொழில்நுட்பம்!

## புதுடில்லியில் அநுர அதிரடிப் பிரகடனம்

தொடர்ச்சி▲

ழைப்பின் அடுத்த கட்டமாகப் பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

இதற்கமைய, பின்வரும் நான்கு அடிப்படை விடயங்களை மையமாகக் கொண்ட பிராந்திய ஒத்துழைப்பை அவர் முன்மொழிந்தார்:

* றைந்த செலவில் பெறக்கூடிய மையப்படுத்தப்பட்ட மொழி தரவுத்தொகுப்புகள் (Language Datasets).
* பொதுவான மதிப்பீட்டு முறைகள்
* பாதுகாப்புக் கருவிகள்
* கூட்டுத் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்.

### கலாசார அச்சுறுத்தல்

"AI தொழில்நுட்பம் ஒரு சில மொழிகள் மற்றும் கருத்தியல்களுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டால், எமது தனித்துவமான கலாசாரப் பன்முகத்தன்மையை இழக்கும் அபாயம் ஏற்படும்" என்று ஜனாதிபதி எச்சரித்தார்.

இலங்கை மற்றும் இந்தியா போன்ற நாடுகளுக்கு மொழி மற்றும் கலாசாரமே நம்பிக்கையின் அடிப்படை என்பதால், உள்ளூர் மொழிகளை டிஜிட்டல் மயப்படுத்தி அவற்றை AI கட்டமைப்பிற்குள் ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

### டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் இளைஞர் சக்தி

இலங்கையிடம் தொழில்நுட்ப அறிவு கொண்ட இளம் மனித வளம் இருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், தரவுப் பாதுகாப்பு மற்றும் சைபர் பாதுகாப்புக்கான சட்டக் கட்டமைப்புகள் தற்போது நவீனமயமாக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பில் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றங்களைப் பாராட்டிய ஜனாதிபதி, அத்தகைய நாடுகளுடன் இணைந்து பாதுகாப்பான பிராந்திய யுஜ தரவு மையங்களை உருவாக்க இலங்கை தயாராக இருப்பதாகவும் உறுதிப்படத் தெரிவித்தார்.








# புதுடில்லியில் அநுர - இம்மானுவேல் சந்திப்பு!

## இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஆகியோருக்கு இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தை நேற்று பிற்பகல் நடைபெற்றது.

புதுடில்லியில் நடைபெற்று வரும் 'AI Impact 2026' சர்வதேச உச்சிமாநாட்டில் பங்கேற்றுள்ள நிலையில், இரு நாட்டுத் தலைவர்களும் இந்த விசேட சந்திப்பை நடத்தினர்.



**முக்கிய கலந்துரையாடல்கள்**

இச்சந்திப்பின் போது, இலங்கை மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

குறிப்பாக பின்வரும் விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.

**தொழில்நுட்ப ஒத்துழைப்பு**

* செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் பிரான்ஸின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது.

பொருளாதார முதலீடுகள்

* இலங்கையின் தற்போதைய பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்கு பிரான்ஸின் ஆதரவு மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகள்.

**சர்வதேச விவகாரங்கள்**

* பிராந்திய பாதுகாப்பு மற்றும் கால நிலை மாற்றத்திற்கு எதிரான கூட்டு நடவடிக்கைகள்.

**முக்கியத்துவம்**

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்றதன் பின்னர், ஐரோப்பிய வல்லரசு ஒன்றின் தலைவருடன் இடம்பெற்ற மிக முக்கியமான சந்திப்பாக இது பார்க்கப்படுகின்றது. சர்வதேச மட்டத்தில் இலங்கையின் புதிய அரசின் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தும் விதமாக இச்சந்திப்பு அமைந்திருந்தது.

இந்தச் சந்திப்பின் போது இரு நாடுகளின் உயர்மட்ட இராஜதந்திரிகளும் உடனிருந்தனர்.










# இலங்கை - பிரேசில் ஜனாதிபதிகளிடையில் புதுடில்லியில் இருதரப்புப் பேச்சுவார்த்தை

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரேசில் ஜனாதிபதி லுலா த சில்வா ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ இருதரப்புப் பேச்சுவார்த்தை நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இந்தியாவின் புதுடில்லியில் தற்போது நடைபெற்று வரும் 'AI Impact 2026' சர்வதேச உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இரு நாட்டுத் தலைவர்களும் அங்கு வருகை தந்துள்ள நிலையிலேயே, இந்த முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை மற்றும் பிரேசில் நாடுகளுக்கு இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், வர்த்தகம், முதலீடு மற்றும் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் புதிய ஒத்துழைப்புகளை உருவாக்குவது குறித்தும் தலைவர்கள் விரிவாகக் கலந்துரையாடினர்.



குறிப்பாக, வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தை அரச நிர்வாகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பில் இரு நாடுகளும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள இணக்கம் தெரிவித்துள்ளன.

உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டுள்ள இந்த உச்சிமாநாட்டின் இடையே, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஏனைய நாடுகளின் தலைவர்களுடனும் சிநேகபூர்வ சந்திப்புகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மூன்று நாள்களாக நாடாளுமன்றில் தமிழரசுக் கட்சி உறுப்பினர் சிறிதரனைச் சுரண்டும் விதத்தில் தொடர்ந்து கருத்து வெளியிட்டு வந்தார் மருத்துவர் அருச்சுனா இராமநாதன்.

கட்சியின் தலைவருக்குத்தான் நாடாளுமன்றத்தில் முன்வரிசை ஆசனம். சுயேச்சைக் குழு உறுப்பினர் என்ற முறையில் அருச்சுனா இராமநாதனுக்கும் அது வழங்கப்பட்டுள்ளது.

இப்போது தமிழரசு கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் பதவி சிறிதரனிடமிருந்து பறிக்கப்பட்ட நிலையில், அவருக்கு ஏன் நாடாளுமன்றத்தில் முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று தொடர்ந்து சபை அமர்வுகளின் போது நோண்டி வந்தார் வைத்தியர் அருச்சுனா இராமநாதன். நேற்றும் அத்தகைய கேள்வி ஒன்றைத் தொடர்ந்து எழுப்பினார் அவர். நாடாளுமன்றக் குழுவின் தலைவராக அல்லாத சிறிதரனுக்கு ஏன் எதிர் அணியில் முன்வரிசை ஆசனம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார் அவர்.

அதையொட்டி உடனடியாக குறுக்கிட்ட இரா.சணக்கியன், "தமிழரசுக் கட்சிக்கு முன் வரிசையில் இரண்டு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தமிழரசுக் கட்சியில் யார் பயன்படுத்துவது என்பதை எங்கள் கட்சிதான் தீர்மானிக்கும். அது எங்கள் கட்சிக்குரிய பிரச்சினை. அதை நாங்கள் பார்த்துக் கொள்வோம். அதற்குள் ஏன் அருச்சுனா தலையிடுகின்றார்?" – என்று நெற்றியடியாகப் பதில் கொடுத்திருக்கிறார் இரா சாணக்கியன்.

இந்தப் பதிலின் மூலம் கட்சிக்குள்




எங்களுக்கிடையே முரண்பாடுகள், வேறுபாடுகள் இருக்கலாம். அவற்றை நாங்கள் பேசியோ, முரண்பட்டோ, மோதியோ தீர்த்துக் கொள்வோம். அதற்குள் நீங்கள் (அருச்சுனா இராமநாதன்) தலையிட முடியாது என்ற சாரபட்ட பிரதிபலிப்பை வழங்கியிருக்கிறார் சாணக்கியன்.

* * *

இலங்கைக்கு வந்திருந்த பிரிட்டிஷ் துணைப் பிரதமர் டேவிட் லம்மி, தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரமுகர்கள் ஐவரை சந்தித்தமை தொடர்பான விடயங்களை இரண்டொரு தினங்களுக்கு முன்னர் என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அப்போது அந்தச் சந்திப்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துக்கள் உட்பட தமிழ் பிரதிநிதிகள் குறிப்பிட்ட விடயங்களை மேலோட்டமாக விவரித்திருந்தேன்.

கஜேந்திரகுமார் தெரிவித்த கருத்து என நான் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் இதுவரை கஜேந்திரகுமாரிடம் இருந்து உத்தியோகபூர்வ மறுப்பு எதுவும் வெளியாகவில்லை. அல்லது முரசுக்கு அவர் அனுப்பி வைக்கவில்லை.

ஆனால் அவரது அல்லக்கைகள் முகப்புத்தகத்தில் இது தொடர்பில் குத்தி முறிகின்றன. பிறிதொரு ஊடகத்துக்கு வழங்கிய பேட்டியில் அவரது கட்சியின் இன்னொரு பிரமுகர் நான் குறிப்பிட்ட தகவல்களை மறுத்து விளக்கம் அளித்திருக்கின்றார் எனவும் அறிய வந்தது.

நல்லது. அந்தக் கூட்டத்தில் கஜேந்திரகுமார் ஆங்கிலத்தில் வெளிப்படுத்திய கருத்துக்களை தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் பங்கு பற்றிய இருவருக்கு நன்கு தெரியும். விடயம் அவர்களுக்கும் புரிந்திருக்கும். அது மாத்திரமல்ல. சந்திப்பில் கலந்து கொண்ட பிரிட்டிஷ் தூதரகத் தரப்பினருக்கும், மொழிபெயர்ப்பாளராக பங்கு பற்றிய பெண்மணிக்கும் கூட கஜேந்திரகுமார் தெரிவித்த கருத்துக்கள் நன்கு புரிந்திருக்கும்.

நான் குறிப்பிட்ட விடயங்கள் தவறு என்றால் மறுக்க வேண்டியவர் கஜேந்திரகுமார். அவர் மறுத்தால் அல்லது மறுப்பை எழுத்தில் அனுப்பினால், அவற்றை அப்படியே பிரசுரிப்போம். அது எங்களின் ஊடக தர்மம். ஆயினும் அப்படி அவர் மறுத்தால், அந்தக் கூட்டத்தில் பங்கு பற்றிய மற்றவர்களுக்கு அதனை நாம் உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தவும் வாய்ப்பு இருக்கும். ஆகவே கஜேந்திர குமாரின் அல்லக்கைகள் சமூக ஊடகங்களில் குத்தி முறிவதை விடுத்து, அவரிடம் இருந்து ஓர் உத்தியோகபூர்வ மறுப்பை முரசுக்கு அனுப்பச் செய்தால் நல்லது என்று பரிந்துரைக்க விரும்புகிறேன்.

---

## ராஜபக்ஷக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

**பொன்சேகாவின் சர்ச்சை கருத்து**

முன்னதாக நேற்றுமுன்தினம் ஊடக சந்திப்பொன்றை நடத்தியிருந்த முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இறுதிப் போரின் போது விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைவது குறித்து ராஜபக்ஷ குடும்பத்தினர் பேச்சு நடத்தினார்கள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

"விடுதலைப்புலிகள் மூன்றாம் தரப்பிடம் சரணடைய விரும்பினர், ஆனால் ராஜபக்ஷக்கள் அவர்கள் இராணுவத்திடம் சரணடைய வேண்டும் என வலியுறுத்தினர். அந்தத் திட்டம் தோல்வியடைந்ததாலேயே உயிரிழப்புகள் ஏற்பட்டன. அவர்கள் சரணடைந்திருந்தால் பிரபாகரன் இன்று வடக்கின் முதலமைச்சராக இருந்திருப்பார்." என்றும் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

**நாமலின் விளக்கம்**

பொன்சேகாவின் இந்த கூற்றுத் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த நாமல் ராஜபக்ஷ எம்.பி. பின்வருமாறு தெரிவித்தார்.

**புதிய தகவல் அல்ல**

"விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு சரணடைய வேண்டும் என்று அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பகிரங்கமாகவே கோரிக்கை விடுத்திருந்தார். எனவே, பொன்சேகா கூறுவது ஒன்றும் புதிய தகவல் அல்ல.

**மாறிவரும் நிலைப்பாடு**

வெள்ளைக்கொடியுடன் வந்தவர்களை மஹிந்த ராஜபக்ஷ கொலை செய்யச் சொன்னார் என்று முன்னர் கூறிய பொன்சேகா, இப்போது அதற்கு முரணான கருத்தை வெளியிடுகின்றார்.

**உண்மை நிரூபணம்**

எது எப்படியிருந்தாலும், ராஜபக்ஷக்கள் கொலையாளிகள் அல்ல என்பதையும், அவர்கள் போரை அமைதியான முறையில் முடிக்கவே முயற்சித்தனர் என்பதையும் உறுதிப்படுத்தியமைக்காக பொன்சேகாவுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

குறைந்தபட்ச உயிரிழப்புகளுடன் போரை முடிக்கவே மஹிந்த ராஜபக்ஷ விரும்பினார். தமிழ் மக்களுக்கு எதிராக ஒருபோதும் போர் தொடுக்கப்படவில்லை." – என்று நாமல் எம்.பி. தெரிவித்தார்.

---

## அநுரகுமார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உறுப்பினர் ரிசாட் பதியுதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இந்த கேள்வியை முன்வைத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சம்மாந்துறை உள்ளிட்ட பகுதிகளில் குர்ஆன் பிரதிகளுக்கு கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இலங்கையில் ஏனைய மத நூல்களுக்கு இல்லாத கட்டுப்பாடுகள், குர்ஆன் மற்றும் அதன் விளக்கவுரைகளுக்கு மட்டும் சுங்கத் துறையால் விதிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இல்லாமல் இஸ்லாமிய நூல்களைக் கொண்டு வர முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த கட்டுப்பாடுகள் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட மோசமான உத்தரவாகும்.

இருப்பினும் தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் ஏன் இதை நீக்க முடியாது என வினவ விரும்புகின்றேன்.

துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் குர்ஆன் பிரதிகளை விடுவிக்கக் கோரி 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுக் கொடுத்தும் இன்னும் தீர்வு கிடைக்கவில்லை .

அத்தகைய பின்னணியில் குர்ஆன் பிரதிகளின் விலை அதிகரித்துள்ளது." என்று தெரிவித்துள்ளார்.


GOLDEN VOICE
OF NORTH
குரல்
தேர்வு
விரைவில்...!
a one
MEDIA NETWORK
MURASU
digital
tamil one

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தாமதிக்கும் நீதி!

இலங்கைக்கு இப்போது அதன் நீதித் துறை தொடர்பான விடயங்களில் பெரும் இழுக்காக - பின்னடைவாக - விளங்குவது தேவையற்ற - மிக மோசமான - கால தாமதமாகும்.

நீதி தேடி நீதிமன்றங்களின் வாசல் படிகளை நாடினால் வருடக் கணக்காக - வாழ்க்கைக் காலம் முழுவதும் - நீதிமன்றங்களில் தேவையற்று அலைய வேண்டியிருக்கும் என்பதுதான் ஒவ்வொரு பிரஜையினதும் பட்டறிவாக இருக்கின்றது.

இந்த நிலையை மாற்றி, நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை வைப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து காண்டம் காண்டமாக பேசியாகி, முடிந்து விட்டது. ஆனால் செயலில் முன்னேற்றம் எதுவும் வரவே இல்லை. இந்த நிலையில் தற்போதைய நீதி அமைச்சரும் இது பற்றிப் பேச புறப்பட்டிருக்கிறார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை செயன்முறைகளைத் துரிதப்படுத்துவதற்கும், அவற்றைக் காலதாமதமின்றி முடிவுறுத்துவதற்கும், வழக்குகளின் தேவைப்பாட்டுக்குஅமைவாகபுதியமற்றும்விசேடநீதிமன்றங்களை நிறுவுவதற்கும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன என நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, வழக்கு விசாரணைச் செயன்முறைகளைத் துரிதப்படுத்துவதை இலக்காகக் கொண்டு நீதியமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்துத் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

நீதிமன்றக் கட்டமைப்பில் நிலவும் சகல பிரச்சினைகளையும்உடனடியாகத்தீர்க்க முடியாவிடினும், வழக்குகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் அவற்றை விரைவாக முடிவுறுத்துவதற்கென புதிய மற்றும் விசேட நீதிமன்றங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறிய அவர், அதற்கு உதாரணமாக உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ட்ரயல் அட்பார் நீதிமன்றம் மற்றும் ஊழல் மோசடி வழக்குகள் தொடர்பான சிறப்பு விசாரணை என்பவற்றைக் குறிப்பிட்டார்.

நல்லது. வழக்குகளை விரைந்து முடிப்பதற்காக புதிய - உரிய - நடவடிக்கைகள் எடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதுதான். ஆயினும் இருக்கின்ற முறைமைகளில் நிலவுகின்ற தாமதத்தை நீக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படப் போகின்றன என்பதுதான் கேள்வி.

உதாரணத்திற்கு உயர் நீதிமன்றத்தில்தாக்கல்செய்யப்பட்டவழக்குகள் தொடர்பில் விசாரணைகள் முடிந்தாலும் தீர்ப்பு வழங்கப்படாமல் நீண்ட காலம் தேவையற்று இழுத்தடிக்கப்படுகின்றது. உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு வந்தால் தீர்ப்பு எப்போது என்பது யாருக்கும் தெரியாது.

சிறு குழந்தைகள் உட்பட மீசாலையில் எட்டுத் தமிழ் அகதிகள் படுகொலை செய்யப்பட்டு மலக் கழிவுக் குழிக்குள் போடப்பட்ட வழக்கில் ட்ரயல் அட் பார் நீதிமன்றத்தினால் ஏகமனதாக குற்றவாளியாகக் காணப்பட்டு, பின்னர் மேன்முறையீட்டிலும் ஐந்து நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றத்தினால் தண்டனை உறுதியளிக்கப்பட்ட இராணுவ அதிகாரி சுனில் ரத்நாயக்காவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு உயர் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று முடிந்து ஒரு வருடம் கடந்தும் இன்னும் தீர்ப்பு வழங்கப்படவில்லை.

இதுபோன்றவிடயங்களில்எந்தநீதிமன்றம் ஆயினும் அதன் தாமதங்கள் குறித்து நேரடியாகத் தலையிட்டு, விசாரித்து, கட்டளை வழங்கும் ஒரு கட்டமைப்பு ஏற்படுத்துவது அவசியம்.








# வடக்கு இளைஞர்களுக்கு வான்வழித் துறை வாய்ப்பு: பலாலியில் உயர்மட்டக் குழு முக்கிய கள விஜயம்!

**(எஸ்.நிதர்ஷன்)**

வடக்கு மாகாண இளைஞர்களிடையே சிவில் விமானப் போக்குவரத்துத் துறை சார்ந்த கல்விகளை ஊக்குவிக்கும் நோக்கிலான விசேட உயர்மட்டக் கலந்துரையாடலும், அதனைத் தொடர்ந்து பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்கான நேரடி களப் பயணமும் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றன.



துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் பொறியியலாளர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு, அமைச்சின் செயலாளர் டபிள்யூ.டபிள்யூ.எஸ்.மங்கள, சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சுனில் ஜயரத்ன மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பா

தொடர்ச்சி▼













# வடக்கு இளைஞர்களுக்கு வான்வழித் துறை வாய்ப்பு: பலாலியில் உயர்மட்டக் குழு முக்கிய கள விஜயம்!

தொடர்ச்சி▲

ளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கப்டன் தமிந்த ரம்புக்வெல்ல ஆகியோரை உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவினர் இன்று வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்தனர். இக்குழுவினரை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் உத்தியோகபூர்வமாக வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் ஆளுநர் ஆகியோரின் தலைமையில், வடக்கு மாகாண இளைஞர்களிடையே சிவில் விமானப் போக்குவரத்துத் துறை சார்ந்த கல்விகளை ஊக்குவிப்பது மற்றும் அதற்கான புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துவது தொடர்பான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து, குறித்த உயர்மட்டக் குழுவினர் பலாலியிலுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். அங்கு அன்றாடம் இடம்பெறும் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரிகளால் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன், விமான நிலையத்தின் தற்போதைய தேவைப்பாடுகள், முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டுமானப் பணிகள் மற்றும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன், அங்கு நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளையும் அமைச்சர் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர் நேரில் பார்வையிட்டனர்.














# இலங்கை - பூட்டான் தலைவர்கள் பல்துறை ஒத்துழைப்பு பற்றி பேச்சு

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பூட்டான் பிரதமர் ஷெரிங் தொப்கே ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ இரு தரப்புப் பேச்சுவார்த்தை நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இந்தியாவின் புதுடில்லியில் தற்போது நடைபெற்று வரும் 'AI Impact 2026' சர்வதேச உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இரு நாட்டுத் தலைவர்களும் அங்கு வருகை தந்துள்ள நிலையிலேயே, இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கை மற்றும் பூட்டான் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் உறுதிப்படுத்துவது குறித்துத் தலைவர்கள் கவனம் செலுத்தினர்.

குறிப்பாக, பிராந்திய ஒத்துழைப்பு, சுற்றுலாத்துறை மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

நவீன தொழில்நுட்ப வளர்ச்சியில் செயற்கை நுண்ணறிவின் (AI) முக்கியத்துவம் மற்றும் அதனைத் தெற்காசியப் பிராந்தியத்தின் பொதுவான நன்மைக்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்தும் இதன்போது கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

சர்வதேசத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டுள்ள இந்த உச்சிமாநாட்டின் ஓர் அங்கமாக, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளைப் புதிய தளத்திற்கு இட்டுச் செல்வதற்கு இந்தச் சந்திப்பு வழிவகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி அநுர - அபுதாபி இளவரசர் புதுடில்லியில் முக்கிய கலந்துரையாடல்

## எரிசக்தி மற்றும் தொழில்நுட்பத் துறையில் புதிய பாய்ச்சல்

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் அபுதாபியின் முடிக்குரிய இளவரசர் ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான் ஆகியோருக்கு இடையிலான உத்தியோகபூர்வ இருதரப்புப் பேச்சுவார்த்தை நேற்று வியாழக்கிழமை மாலை நடைபெற்றது.

இந்தியாவின் புதுடில்லியில் தற்போது நடைபெற்றுவரும் 'AIImpact2026" சர்வதேச உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இரு நாட்டுத் தலைவர்களும் அங்கு வருகை தந்துள்ள நிலையிலேயே, இந்த முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்துத் தலைவர்கள் விரிவாக ஆராய்ந்தனர். குறிப்பாக, எரிசக்தித் துறை, முதலீடுகள் மற்றும் நவீன தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவற்றில் இரு நாடுகளும் இணைந்து செயற்படுவது குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது குறித்தும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைப் புதிய தளத்திற்கு இட்டுச் செல்வது குறித்தும் தலைவர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

சர்வதேசத் தலைவர்கள் பலரும் கலந்துகொண்டுள்ள இந்த உச்சிமாநாட்டின் ஓர் அங்கமாக, மத்திய கிழக்கு பிராந்தியத்தின் முக்கிய நாடான அபுதாபியுடன் இராஜதந்திர உறவுகளை மேம்படுத்த இந்தச் சந்திப்பு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.



## கட்டுப்பாட்டை இழந்த கார் ஏற்படுத்திய விபரீதம்:

# முறிந்து விழுந்த மின் கம்பத்தில் மோதி மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழப்பு



குருநாகல் – நாரம்மல வீதியில் நேற்று இடம்பெற்ற கோர விபத்தில் 39 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாரம்மல நோக்கி அதிவேகமாகச் சென்ற கார் ஒன்று, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இந்த மோதலின் பலத்தினால் மின்கம்பம் முறிந்து வீதியின் குறுக்கே விழுந்துள்ளது.

அதேநேரம், குருநாகல் நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, வீதியில் விழுந்து கிடந்த மின் கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு, குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் உஹமிய பகுதியைச் சேர்ந்த 39 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாகக் காரின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளதோடு, விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை நாரம்மல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.




# இந்திய – இலங்கை தளபதிகள் சந்திப்பு



இந்தியாவின் விசாகப்பட்டினத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சர்வதேசக் கடற்படைக் கண்காட்சியின் ஒரு பகுதியாக, இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் தினேஷ் கே. திரிபாதி மற்றும் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பனாகொட ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அண்டை நாடுகளின் கடற்படைகளுக்கு இடையே நிலவும் நெருக்கமான மற்றும் நீடித்த கடல்சார் உறவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்தச் சந்திப்பு அமைந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இரு நாட்டு கடற்படைகளுக்கும் இடையிலான செயல்பாட்டுத் தொடர்புகள், திறன் மேம்பாட்டு முயற்சிகள் மற்றும் “சிலினெக்ஸ்” போன்ற கூட்டுப் பயிற்சிகள் மூலம் வலுப்படுத்தப்படும் ஒத்துழைப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வழக்கமான பயிற்சிகள் மற்றும் தொழில்முறை பரிமாற்றங்கள் மூலம் உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு நாட்டுத் தளபதிகளும் கலந்துரையாடியுள்ளனர்.

விசாகப்பட்டினம் கடற்கரையில் நடைபெற்ற இந்த பிரம்மாண்ட நிகழ்வில் 74 நாடுகள் பங்கேற்றன.

இதில் 66 இந்தியக் கப்பல்கள், 19 வெளிநாட்டுக் கப்பல்கள், 3 இந்திய நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 60 இற்கும் மேற்பட்ட விமானங்கள் பங்கேற்றன.

இலங்கைக் கடற்படையின் “சாகர” மற்றும் “நந்திமித்ர” ஆகிய போர்க்கப்பல்கள் கண்காட்சியில் பங்கேற்றன.

# சர்ச்சைக்குரிய புத்தர் சிலைக்கு அருகில் இருக்கும் சிற்றுண்டிச்சாலையின் பகுதிகள் நேற்று அகற்றல்

## இன்று வழக்கு நீதிமன்றுக்கு வருகையில் இறுதி நேர நகர்வு





(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை டச்பே கடற்கரையில் அனுமதி பெறப்படாது சட்ட விரோதமாக அமைக்கப்பட்டு தனியார் ஒருவரால் நடத்தப்பட்டு வந்த குளிர்பான மற்றும் சிற்றூண்டி கடை நேற்றுக் கடையை இதுவரை நடத்தி வந்த தரப்பினரால் திடீர் என அகற்றப்பட்டது.

இதே வேளை இந்த இடத்தில் கடையை நடத்துவதற்கு முன்னர் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருந்த 127 சதுர அடிப் பரப்பளவில் மட்டும் தொடர்ந்தும் கடை கட்டுமானத்தை வைத்திருக்கும் வகையில் ஏனைய பகுதிகள் முழுமையாக அகற்றப்பட்டன.

இக்கடற்ரையில் 127 சதுர அடி பரப்பளவில் கடையொன்றை அமைக்க கடலோர பாதுகாப்பு திணைக்களம் முன்னர் தற்காலிக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எனினும் கடை கட்டுமானத்தை அமைத்தவர்கள் அனுமதியற்ற வகையில் 405 சதுர அடி பரப்பளவில் அந்த சிற்றுண்டிச் சாலையை அமைத்திருந்தனர்.

இக்கட்டுமானம் தொடர்பில் சிற்றூண்டிச்சாலையை அமைத்த தரப்பினால், கரையோரப்பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு எதிராக முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டு வழக்கு இன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

இந்தச் சட்டவிரோத கடற்கரை சிற்றூண்டிச்சாலையை சென்ற வருடம் நம்பர் மாதம் 14 ஆம் திகதி கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர மூலவளங்கள் அபிவிருத்தித் திணைக்களம் அகற்றச் செல்ல இருந்த போதே, அன்றைய தினத்திற்கு முந்திய தினமான 13ஆம் திகதி நள்ளிரவு முதல் தற்போதைய சர்ச்சைக்குரிய கடற்கரை புத்தர்சிலை மற்றும் கட்டுமானம் என்பன அங்கு திடீர் என அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனையில் பசுமை பெறுகை விழிப்புணர்வு








(எஸ்.எஸ்.அமிர்தகழியாந்)

சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்றம் ஒழுங்குபடுத்தலின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச திணைக்களங்கள், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், மாநகர சபை நகரசபை, பிரதேச சபை அனைத்து திணைக்களங்களின் விடயம் சார்

உத்தியோகத்தர்களுக்கான பசுமை பெறுகை விழிப்புணர்வு (Green procurement awareness) தொடர்பான ஒரு நாள் செயலமர்வு கல்லடி கிறீன் கிறாஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் மாவட்ட செயலக, பிரதேச செயலக, பிரதேச சபை, நகர சபை, மாநகர சபையின் அரச உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் இதில் மட்டக்களப்பு மாவட்ட பிரதேச செயலகங்களின் இணைக்கப்பட்டுள்ள சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.



# காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்வது அவசியம்


## சத்தியலிங்கம் எம்.பி. நாடாளுமன்றத்தில் வலியுறுத்து

காங்கேசன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யும் பட்சத்தில் பொருள்களின் கொழும்பு வழிச்செலவு குறைந்து பொருள்களின் விலைகள் குறைவடையும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இன்று விசேட வியாபாரப் பண்ட அறவீட்டு சட்டத்தின் கீழ் மூன்று கட்டளைகள் தொடர்பாக நாங்கள் இங்கு விவாதிக்கின்றோம். இந்தக் கட்டளைகள் தொடர்பாகப் பார்க்கும் போது எங்களுடைய நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் போன்ற பொருள்களுக்கு அதைவிட மேலதிகமாக அறுபத்தி இரண்டு உணவுப் பொருள்களுக்கான வரி விதிப்பு சம்பந்தமாக இன்றைய இந்த விவாதம் அமைகின்றது. எங்களுடைய நாட்டிலே வடக்கு மாகாணம் என்பது வெங்காயம், உருளைக்கிழங்கு பயிர்ச்செய்கையிலே ஒரு பாரிய பங்களிப்பை கடந்த காலங்களிலே செய்த ஒரு மாகாணம். அது உங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த மாகாணத்திலே இப்போது இந்தப் பயிர்ச்செய்கை பல விதத்திலும் பாதிக்கப்பட்டு ஒரு நலிவுற்ற பயிர்ச்செய்கையாக இருக்கிறது. இவ்வாறு இறக்குமதிகளுக்கு வரியை விதிப்பதன் ஊடாக இறக்குமதியை கட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல் அரசாங்கத்துக்கான வரி விதிப்பின் ஊடாக பெறப்படுகின்ற வருமானம் ஏற்படுவதோடு, உள்நாட்டு உற்பத்தியை பெருக்குகின்ற ஓர் உத்தியாக இதை நாங்கள் பார்க்கலாம்.

ஆனால் நாங்கள் இவ்வாறான உணவுப் பொருள்களுக்கு எங்களுடைய நாட்டிலே தன்னிறைவை ஏற்படுத்தக் கூடிய வகையிலே வரி விதிப்பு மாத்திரம் அதற்கு உறுதுணையாக இருக்காது. ஒரு



பொருளுக்குரிய வரி விதிக்கப்படும்போது அதில் இரண்டு பக்கங்களையும் நாங்கள் பார்க்க வேண்டும். ஒன்று, இந்த வரி விதிப்பால் உள்நாட்டு உற்பத்தியை கூட்டுகின்ற போது விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற இலாபம். அதேபோல வரி விதிப்பின் ஊடாக நுகர்வோருக்கு ஒரு பாரிய சுமையை, செலவை ஏற்படுத்துகின்ற அடுத்த பக்கத்தையும் பார்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

உற்பத்தியாளர்க அவர்களுடைய உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல விடயங்களை அரசாங்கம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். அவர்களுக்கான பல உதவிகளை இந்த அரசாங்கம் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அந்த வகையிலே இந்த உற்பத்தியாளர், விவசாயிகளுக்கான மானியம் மிகவும் முக்கியமான ஒரு விடயம். அதிலும் குறிப்பாக உர மானியம். உங்களுக்குத் தெரியும் கடந்த பெரும் போகத்தில் கூட நெல்லுக்கான உர மானியத்தைப் பெற வேண்டிய எமது விவசாயிகள், வடக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் தற்போது 85 வீதமான அறுவடை முடிந்துவிட்டது. எனினும் இன்றுவரை அவர்களுக்கான உர மானியம் கிடைக்கவில்லை.

இவ்வாறிருக்குமாக இருந்தால் எவ்வாறு நாங்கள் இந்த நாட்டினுடைய உற்பத்தி பொருளாதாரத்தை பெருக்குவது? அதேபோல அவர்களுக்கான விற்பனை விலை நிர்ணயம் செய்வது. நெல்லுக்கான நிர்ணயம் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால் கொள்வனவு நடைபெறவில்லை. அதேபோல அழிவுக்கான காப்புறுதி இருக்கின்றது. இன்றுவரை முழுமையாக காப்புறுதி செய்யப்படவில்லை. அதேபோல வனவிலங்குகளால் ஏற்படுகின்ற தாக்கம், அதற்கொரு முடிவில்லை. ஆகவே நாங்கள் உற்பத்திப் பொருளாதாரத்தை பெருக்குவதற்காக உள்நாட்டு உற்பத்தியை கூட்டி தன்னிறைவு அடைவதற்காக பல விடயங்களை செய்யும்போது இந்த வரி விதிப்பு மாத்திரம் எங்களுக்கு உதவி செய்யாது.

இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்களுக்கான விலை நிர்ணயத்தின் போது அந்தப் பொருளுடைய விலையுடன் போக்குவரத்துக்கான செலவும் சேர்க்கப்படுகிறது. அதற்கு மேலே வரி விதிக்கப்படுகிறது.

குறிப்பாக விவசாய உற்பத்தி பொருள்கள் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. அந்த உற்பத்தி பொருள் இந்தியாவில் இருந்தே கொழும்புக்கு வந்து கொழும்பில் இருந்து வடமாகாணத்துக்கு வரும்போது அதனுடைய விலை பெரிதாகின்றது.

ஆகவேதான் இந்திய அரசாங்கத்தாலே எங்களுக்குத் தரப்படுகின்ற அந்த 63.5 மில்லியன் டொலரை எடுத்து வடமாகாணத்தில் இருக்கிற காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யுங்கள் என்று கேட்கின்றோம்.

ஆனால் இந்த அரசாங்கம் அதைக் கணக்கிலெடுப்பதாக தெரியவில்லை. ஆகவே எங்களுடைய மக்களுக்கான பொருளாதார மேம்பாட்டுக்கு தேவையான வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பாக ஜனாதிபதி தலையிட்டு அந்தத் துறைமுகத்துக்கு அபிவிருத்திக்குத் தரப்படுகின்ற மானியமான அந்தப் பெரிய தொகையை பயன்படுத்த வேண்டும். - எனத் தெரிவித்தார்.




# 409 குடும்பங்களைச் சேர்ந்த 1,320 பேர் மட்டக்களப்பில் கனமழையினால் பாதிப்பு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 பிரதேச செயலாகப்பிரிவுகளில் 409 குடும்பங்களைச் சேர்ந்த 1,310 நபர்கள் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட கன மழையினால் ஐந்து பிரதேச செயலாகப்பிரிவுகளில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவினில் 271 குடும்பங்களும், எறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் 103 குடும்பங்களும், கோரளைப் பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 21 குடும்பங்களும், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் 13 குடும்பங்களும், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் ஒரு குடும்பமும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும் மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு வீடு முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் தெரிவித்துள்ளனர்.





# மன்னாரில் டைனமைட்டுடன் கைதான இரு மீனவர்களுக்கும் விளக்கமறியல்!

**(மன்னார் நிருபர்)**

மன்னார் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கு என தமது உடமையில் 'டைனமைட்' வெடி பொருளை வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இரு மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

மன்னார் – தாழ்வுபாடு பகுதியில் நேற்று வியாழன் அதிகாலை கடற்படையினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போது மீன்பிடி நடவடிக்கைக்கு என தமது உடமையில் டைனமைட் வெடிப் பொருளை வைத்திருந்த இரு மீனவர்களை



ஓலைத்தொடுவாய் கடற்படையினர் கைது செய்தனர்.

அவர்களிடம் மூன்று தொகுதி டைனமைட் வெடிப்பொருள் மீட்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளின் பின்னர் இரு சந்தேக நபர்களையும் மன்னார் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரியிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து மேலதிக விசாரணையின் பின்னர் நேற்று வியாழன் மதியம் இரு சந்தேக நபர்களும் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் இரு மீனவர்களையும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அதே நேரம் கைப்பற்றப்பட்ட 'டைனமைட்' வெடி பொருட்களை இரசாயனப் பகுப்பாய்வுக்காக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரிகளை மீண்டும் சேவையில் இணைக்கத் தீர்மானம்

5 வயதிற்குட்பட்ட ஓய்வு பெற்ற சிறைச்சாலை அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் திணைக்களம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

முதலாம் தர மற்றும் 2 ஆம் தர ஜெய்லர், சார்ஜன்ட், ஒழுங்குமுறை அதிகாரிகள், தாதியர் மற்றும் மருந்து கலவையாளர் பதவிக்காக இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறவுள்ளதாக சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் ஏ.சீ.கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

# போதியளவு எரிவாயு உள்ளது: லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு




சந்தையில் போதியளவு லிட்ரோ சமையல் எரிவாயு உள்ளதெனவும் பொதுமக்கள் பீதியடைய தேவையில்லை எனவும் லிட்ரோ லங்கா நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

கொழும்பு சந்தையில் நிலவும் எரிவாயு சிலிண்டர்களுக்கான கேள்வி குறித்து பதிலளித்துள்ள லிட்ரோ லங்கா நிறுவனம், போதிய அளவு கையிருப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை எனவும் உறுதியளித்துள்ளது.

சந்தையில் ஏற்பட்ட எதிர்பாராத கேள்வி அதிகரிப்பு மற்றும் கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி ஏற்பட்ட 2 நாள்கள் விநியோகத் தடை காரணமாகவே இந்த தற்காலிக தட்டுப்பாடு ஏற்பட்டதாக லிட்ரோ நிறுவனம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் விளக்கமளித்துள்ளது.

சாதாரண விநியோக நடவடிக்கைகளை மீள முன்னெடுக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என லிட்ரோ நிறுவன தலைவர் சன்ன குணவர்தன தெரிவிக்கிறார்.

பெப்ரவரி 17, 18 ஆம் திகதிகளில் 284,000 உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்கள் ஏற்கனவே சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும் நேற்று முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை மேலும் 351,000 சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விநியோகத்தை மேலும் சீரமைக்கும் நோக்கில் லிட்ரோ நிறுவனம் தேவையான அளவு கையிருப்புகளுக்கான முன்பதிவுகளை ஏற்கனவே செய்துள்ளதாகவும் இம்மாத இறுதிக்குள் 3 கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன எனவும் லிட்ரோ நிறுவனத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, எரிவாயு தட்டுப்பாடு ஏற்படாதென உறுதியளித்த லிட்ரோ நிறுவனத் தலைவர் பொதுமக்கள் தேவையற்ற விதத்தில் பீதியடைந்து சிலிண்டர்களைக் கொள்வனவு செய்ய வேண்டியதில்லை எனவும் அறிவுறுத்தியுள்ளார்.

# இலங்கையில் குர்ஆன் மீதான தடை முஸ்லிம்களுக்கு எதிரான பாகுபாடு

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு



குர்ஆன் மீதான தடை முஸ்லிம்களுக்கு எதிரான பாகுபாடாக அமைந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 2021ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி இஸ்லாமிய நூல்களை இறக்குமதி செய்ய விதிக்கப்பட்ட தடையால் ஆயிரக்கணக்கான குர்ஆன் பிரதிகள் துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

இந்த தடையால் குர்ஆன் பிரதிகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இது ஒரு மதத்திற்கு எதிரான பாகுபாடாகும்.

வக்ஃப் சபை உறுப்பினர்களை நியமிக்க அரச புலனாய்வுப் பிரிவின் அறிக்கை கட்டாயம் என்ற விதியை நீக்க வேண்டும் .

சர்ச்சைக்குரிய மொழிபெயர்ப்புகள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்பதால் ஒரு குழுவின் ஆய்வுக்குப் பிறகே நூல்கள் அனுமதிக்கப்படுவதாக அரசு தரப்பு கூறுகிறது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய இது குறித்து சுங்கத்துறையிடம் அறிக்கை கோரியுள்ளார். அதேநேரம் துறைமுகத்தில் உள்ள பிரதிகளை உடனடியாக விடுவிக்கக் கோரி 25 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு அளித்துள்ளனர்." என்று தெரிவித்தார்.



# க்ரிஷ் கொடுக்கல் - வாங்கல் வழக்கின் ஆரம்ப விசாரணைக்கு திகதி நிர்ணயம்

க்ரிஷ் கொடுக்கல் – வாங்கல் ஊடாக 70 மில்லியன் ரூபாவை முறைகேடு செய்ததாகக் கூறி முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கின் ஆரம்ப விசாரணைகளை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று திகதி நிர்ணயித்தது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ணா சுவதுருகொட முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது திகதி நிர்ணயிக்கப்பட்டது.

ரக்பி விளையாட்டை ஊக்குவிப்பதாகக் கூறி இந்தியாவின் க்ரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபாவை பெற்று முறைகேடு செய்ததாக நாமல் ராஜபக்ஷ விற்கு எதிராக சட்ட மா அதிபரினால் கடந்த வருடம் பெப்ரவரி05ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ஊழல் எதிர்ப்பு குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளரான வசந்த சமரசிங்க, 2016ஆம் ஆண்டு அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து நிதிக்குற்ற புலனாய்வு பிரிவினால் நடத்தப்பட்ட விசாரணைகளில் இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டது.

இதற்கு முன்னர் நாமல் ராஜபக்ஷ வழக்கின் சந்தேகநபராக பெயரிடப்பட்டு கைது செய்யப்பட்டு, கோட்டை நீதவான் நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்டது.

# அதிவேக வீதிகளில் ஆசனப்பட்டி சட்டத்தினை பின்பற்றாத அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை



அதிவேக வீதிகளில் ஆசனப்பட்டி இன்றி வாகனங்களை அனுமதிக்கும் அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.

வர்த்தமானி அறிவித்தலுக்கமைய அதிவேக வீதிகளில் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஆசனப்பட்டி இல்லாத வாகனங்களில் அவற்றை பொருத்துவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசமும் தற்போது நிறைவடைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதிவேக வீதிகளில் உள்ள 31 நுழைவாயில்களிலும் இந்த நடைமுறையை கடுமையாக பின்பற்றுவதற்கு அதிகாரிகள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான பிரதி பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர தெரிவித்துள்ளார்.

# கால்வாயில் கவிழ்ந்த டிரக்டர்! 26 வயது இளைஞர் உயிரிழப்பு!!

அனுராதபுரம், ஹரிகஸ்வெவ – கலங்குட்டிய கால்வாய் அருகே இடம்பெற்ற உழவு இயந்திர விபத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கலங்குட்டிய கால்வாய் வீதியில் நேற்று பயணித்துக்கொண்டிருந்த உழவு இயந்திரம், எதிர்பாராத விதமாக வீதியை விட்டு விலகி கால்வாய்க்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் உழவு இயந்திரத்தை செலுத்திய ஓட்டுநர் படுகாயமடைந்த நிலையில், உடனடியாக மீட்கப்பட்டு தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர் கலங்குட்டிய பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை ஹரிகஸ்வெவ பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.









# ஆசிரியர் வெற்றிடங்களுக்கு அமைய ஆள்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடரும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

பெருந்தோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்திப் பணிகளின்போது மாவட்ட அபிவிருத்திக் குழுக்களுடன் இணைந்து செயற்படுமாறும் நிலவும் வெற்றிடங்களுக்கு அமைய எதிர்காலத்தில் ஆசிரியர் சேவைக்கு மேலதிக ஆள்சேர்ப்புக்கள் முன்னெடுக்கப்படும் என்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டப் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குவதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இக்கலந்துரையாடலில் கல்வி உயர் கல்வி தொழிற்கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக 23 000 ஆசிரியர்களைச் சேவைக்கு இணைத்துக்கொள்வதன் மூலம் தற்போதுள்ள ஆசிரியர் பற்றாக்குறைக்கு ஓரளவுக்குத் தீர்வு காண எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகளின் காணி உரிமைகளை உறுதிப்படுத்துதல் போதிய சுகாதார வசதிகள் மற்றும் மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த அதிகாரிகளுக்குப் பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தரம் 13 மாணவர்கள் விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளில் எதிர்நோக்கும் சிக்கல்கள் மற்றும் தொழிற்கல்வியின் போது நிலவும் மொழிப் பிரச்சினைகளைத் தீர்க்க விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பெருந்தோட்டப் பாடசாலைகள் அனைத்தும் அரச பாடசாலைகளே என்பதை வலியுறுத்திய பிரதமர் அவற்றின் பெயரிடல் மாற்றம் மற்றும் மாவட்டக் குழுக்களின் நேரடி கண்காணிப்பு குறித்து ஆலோசித்தார்.



# கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் சு.இராமச்சந்திரன் எங்கே?

## பருத்தித்துறையில் நாளை கவனயீர்ப்பு போராட்டம்

வடமராட்சி – கரவெட்டியை சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ஒட்டுக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இந்த சம்பவத்திற்கு நீதி கோரி யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் நாளை கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

ஊடக செயற்பாட்டின் பின்னர் வீடு திரும்பிய போது துன்னாலை கலிகை சந்தியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் வைத்து கடந்த 15.02.2007 அன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அந்தக் காலப்பகுதியில் ஒட்டுக்குழுவாக செயற்பட்ட ஈ.பி.டி.பியினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பல்வேறு சாட்சியங்கள் இருந்த போதிலும் இதுவரை உரிய விசாரணை எதுவும் மேற்கொள்ளப்படாதுள்ளது. 19 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இராமச்சந்திரன் உயிரோடு இருக்கின்றாரா இல்லையா என்பது தெரியாதுள்ளது.

ஊடகவியலாளர் சு.இராமச்சநத்திரன் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்திற்கும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கேட்டும் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.





# புத்தளத்தில் புதிதாக பள்ளிவாசல் திறப்பு விழா

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

புத்தளம் தாருல் குர்ஆன் அல் கரீம் அரபு மத்ரஸா வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

அல் மஸ்ஜிதுல் சித்தீக்கா எனும் இந்த புதிய பள்ளிவாசலின் திறப்பு விழா நிகழ்வு மத்ரசாவின் அதிபரும், புத்தளம் நகர ஜம்இய்யத்துல் உலமா பிரதி தலைவருமான அஷ்ஷெய்க் எம்.இஸட்.செளக்கி பஹ்ஜி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் புத்தளம் நகரக்கிளை தலைவர் அஷ்ஷெய்க் ஏ.பி.ஜிப்னாஸ் அல் மிஸ்பாஹி, புத்தளம் இஹ்யாவுல் உலூம் அரபுக் கல்லூரியின் அதிபர் அஷ்ஷெய்க் சனூஸ் ரஹ்மானி, புத்தளம் மன்பஉஸ்ஸாலிஹாத் பெண்கள் அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க், அல்ஹாபிழ், அல்காரி ஏ.எம்.எம்.ரியாஸ் தேவ்பந்தி, புத்தளம் அஷ்ரபிய்யா அரபுக் கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் இமாமுத்தீன் அஷ்ரபி உள்ளிட்ட ஊர் பிரமுகர்கள், நலன் விரும்பிகள் மற்றும் மத்ரஸா மாணவர்களும் கலந்து கொண்டனர்.





# பல நாள்களாக எரிவாயுத் தட்டுப்பாடு நிலவுகிறது உடனடியாக தீர்வு ஒன்றைப் பெற்றுத் தாருங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் தெரிவிப்பு

பல நாள்களாக நாட்டில் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதால், நுகர்வோர் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிவாயு வரிசைகள் உருவாகும் நிலை ஏற்பட்டுள்ளதால், இந்த எரிவாயுத் தட்டுப்பாட்டிற்கு தீர்வொன்றைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.




எரிவாயு கிடைக்காமல் போவது நாட்டு மக்களின் மனித உரிமைகளை மீறும் விடயமாகும். இது உயிர்வாழும் உரிமையைக் கூடப் பாதுகாப்பதுடன் தொடர்புடையதாக அமைந்து காணப் படுவதனால், இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, உடனடி தீர்வுகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டார்.

சமூக ஊடகங்கள் மூலம் தகவல் களைப் பெறுவதும் தவறல்ல என்றும், இந்த எரிவாயு வரிசையை எதிர்க்கட்சி தோற்றுவிக்கவில்லை என்றும், தற்சமயம் தட்டுப்பாடு நிலவுவதால், தயவுசெய்து இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் நுகர்வோர் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணுமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.




# குடத்தனையில் அரங்கேறிய சிலுவைப்பயணம்....!

**(பூ.லின்ரன், மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ் வடமராட்சி கிழக்கு குடத்தனை வடக்கு புனித அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய முன்றிலில் நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் சிலுவையின் பயணம் எனும் தற்கால ஆற்றுகை நிகழ்வு அரங்கேறியது.

இவ் ஆற்றுகையானது யாழ் மறை இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்டது. மணற்காட்டு பங்கு தந்தை யோன் குருஸ் அடிகளார் ஆரம்பிக்கப்பட்டு மிகவும் மக்கள் வரவேற்புடன் நிகழ்வு இடம்பெற்றது.

இவ் நிகழ்வில் மணற்காட்டு பங்கு மக்கள், இளைஞர்கள், சிறுவர்கள் மற்றும் இந்து மத சகோதரர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# மட்டு. மாவட்டதின் சில பகுதிகளுக்கு தண்ணீர் அம்பாறை மாவட்டம் மூலம் வினியோகியுங்கள்

## இரா.சாணக்கியன் எம்.பி. கோரிக்கை



தமது நீண்ட கால கோரிக்கைக்கு இணங்க மட்டக்களப்பின் பல பகுதிகளில் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறித்து நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி – பதில் நேரத்தின் போது வீடமைப்பு, நிர்மாணத்துறை, நீர் வழங்கல் அமைச்சருக்கான முதல் கேள்வியின் போது கருத்து வெளியிட்டிருக்கின்றார் மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

அவர் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில், போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட காக்கட்சி வட்டை, விளாந் தோட்டம் , திக்கோடை – தும்பாளை மற்றும் மண்முனை பற்று பிரதேச செயலக பிரிவுகளுட்பட்ட கிராமங்கள், கிரான்குளம் மற்றும் தர்மபுரம் ஆகிய பிரதேசங்களுக்கு மக்களுக்கான குடி தண்ணீரை வழங்க வேண்டும் எனக் கோரியிருந்தேன்.

அரசாங்கம் எமது கோரிக்கைக்கு இணங்க கடந்த ஆண்டு நீர் வழங்கல் அதிகார சபை மூலம் 14 கிலோ மீட்டரும், ரி.டி. திட்டம் மூலம் 8 கிலோமீட்டரும் நிறைவேற்றியமைக்கு இந்த இடத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், இந்த ஆண்டில் ஆரம்ப கட்டமாக கொக்கட்டிச்சோலை பகுதியில் 10 கிலோமீட்டர், களுவாஞ்சிக்குடியில் 13 கிலோமீட்டர், மண்டூரில் 11 கிலோமீட்டர் என மொத்தம் 42 கிலோமீட்டர் திட்டங்களையும், மேலும் நீர் வழங்கல் அதிகார சபை மூலம் 12 கிலோமீட்டர் நீர்வழங்கல் பணிகளையும் மேற்கொள்ள இணங்கியுள்ளீர்கள். இதற்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால், அமைச்சர வழங்கிய தகவல்களில் சில பிழைகள் இருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக காக்காச்சிவட்டை பிரதேசத்தில் உள்ள புளியடி, நெல்லிக்காடு, பாலையடி வட்டை, 37ஆம் மற்றும் 38ஆம் கிராமங்கள், வால்கட்டு, வாதகல் மடு, பன்சேனை போன்ற பல கிராமங்களில் நீர் விநியோகத்தில் இன்னும் சிக்கல்கள் நிலவுகின்றன. இந்தப் பகுதிகளுக்கு நீர் வழங்குவது தொடர்பான முக்கிய பிரச்சனை என்னவெனில், அம்பாறை மாவட்டத்திலிருந்தே நீர் வழங்கப்பட வேண்டிய நிலைமை உள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் நீர்வழங்கல் அமைப்பிலிருந்து அந்தப் பகுதிகளுக்கு இணைப்பு வழங்க இயலாது. இதனை கருத்தில் கொண்டு, மாற்று வழியாக மண்டூரில் உள்ள நீர் வழங்கல் அதிகார சபை அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் புதிய "பேக்கேஜ்" அடிப்படையிலான இணைப்பு முறைமையை உருவாக்கு வதற்கான முன்மொழிவை நாங்கள் வைத்துள்ளோம். அந்த நிலத்தை வழங்க பிரதேச செயலாளர் ஏற்கனவே இணங்கியுள்ளார். அதற்கமைய எமது மக்களுக்கு அவசியமிக்க குடி தண்ணீருக்கான வசதியினை முதல் இரண்டாம் கட்டம் என இங்கு குறிப்பிடாத மட்டக்களப்பின் தேவையுள்ள ஏனைய பகுதிகளுக்கும் மிக விரைவில் ஏற்படுத்தி தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.



# விவசாய ஓய்வூதியத்தை பெறாதவர்களின் கொடுப்பனவுகளை இடைநிறுத்த தீர்மானம்

தொடர்ச்சியாக 06 மாதங்களுக்கு மேலதிகமாக விவசாய ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ளாதவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கமநல மற்றும் கமநல சேவைகள் காப்புறுதி சபை ஊடாக வருடாந்தம் 79,215 விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது.

அத்துடன் 6,381 மீனவர்களுக்கும் ஓய்வூதிய கொடுப்பனவு வழங்கப் படுகின்றது.

இவர்களில் சுமார் 6,105 பேர் 06 மாதங்களுக்கு மேலதிகமாக ஓய்வூதிய கொடுப்பனவை பெற்றுக் கொள்ளவில்லை என குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்காரணமாக ஏற்படக்கூடிய நிதி முறைகேடுகள் மற்றும் ஊழலை தடுக்கும் நோக்கில் அவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் 1918 என்ற துரித இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

குழு-பி (புள்ளிப்பட்டியல்)

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிம்பாப்வே | 4 | 3 | 0 | 0 | 1 | 7 | 1.506 |
| 2 | இலங்கை | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | 1.741 |
| 3 | அயர்லாந்து | 4 | 1 | 2 | 0 | 1 | 3 | 0.150 |
| 4 | ஆஸ்திரேலியா | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | 0.414 |
| 5 | ஓமன் | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -4.546 |






சிகந்தர் ராசா

| ஓட்டங்கள் | பந்துகள் | சிக்ஸர்கள் | பௌண்டரிகள் |
|---|---|---|---|
| 45 | 26 | 04 | 02 |

# அதிர்ச்சி!

## கொழும்பில் வைத்து நேற்று மாலை இலங்கைக்குக் கொடுத்தது சிம்பாப்வே

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற பி பிரிவு லீக் ஆட்ட மொன்றில் சிம்பாப்வே இலங் கைக்கு அதிர்ச்சியளித்து வெற்றி பெற்றது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் 38ஆவது லீக் போட்டி நேற்று மாலை கொழும்பில் நடைபெற்றது.

இந்தப் போட்டி பி பிரிவில் உள்ள இலங்கை - சிம்பாப்வே அணிகளுக்கிடையில் நடை பெற்றது.

பி பிரிவில் இடம்பெற்ற இவ்விரு அணிகளும் இதுவரை எந்வொரு போட்டியிலும் தோற்காத நிலையில் களம் கண்டன.

இதில் முதலில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடியது. அதன்படி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பதும் நிசங்க மற்றும் குசல் பெரோ ஆகியோர் களமிறங்கினர்.

அணி 54 ஓட்டங்களைப் பெற்றபோது குசல் பெரேரா 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பின்னர் வந்த குசல் மெண்டிஸ் தனது பங்குக்கு 14 ஓட்டங்களைச் சேர்த்துச் சென்றார்.

மறுமுனையில் நின்று ஆடிய பதும் நிசங்க அரைச் சதம் கடந்து 62 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆடிய கமிந்து மெண்டிஸ் (7), தசுன் ஷானக (6) ஹெமந்த (0) ஆகியோர் விரைவாக ஆட்டமிழந்தனர்.

இதற்கிடையில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பவன் ரத்நாயக்க 44 ஓட்டங்களை விளாசிச் சென்றார்.

பின்னர் 20 ஓவர்கள் நிறைவில் இலங்கை அணி, 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 178 ஓட்டங்களைச் சேர்த்தது.

சிம்பாப்வே அணி சார்பாக பந்துவீச்சில், பிளெஸிங் முஸ ரபனி, பிராண்ட் எவன்ஸ், கிறேம் கிறேமர் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் ரியான் பர்ட் ஒரு விக்கெட்டையும்கைப்பற்றினர்.

பின்னர் 179 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய சிம்பாப்வே அணி, சிறப்பான - அதிரடியான ஆரம்பத்தைக் கண்டது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களான பிறையன் பென்னெட் - மறுமனி ஜோடி, 8.3ஆவது ஓவரில் முதல் விக்கெட்டுக்காக 69 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் பிரிந்தது.

மறுமனி 34 ஓட்டங்களுடனும் பின்னர் வந்த ரிலயன் பர்ட் 23 ஓட்டங்களுடனும் சிகந்தர் ராசா 45 ஓட்டங்களையும் சேர்த்துச் சென்றனர். சிகந்தர் ராசா 26 பந்துகளில் இந்த 45 என்ற இலக்கை எட்டியமையே சிம்பாப்வேயின் வெற்றிக்கு வழிவகுத்தது.

தொடர்ந்து வந்த முசெகிவா ஓர் ஓட்டத்துடன் நடையைக் கட்டினார்.

ஒருமுனையில் விக்கெட்டுகள் சாய்ந்தாலும் மறுமுனையில் ஆரம்பம் முதல் இறுதிவரை களத் தில் நின்ற பிறையன் பென்னெட் 63 ஓட்டங்களை அதிரடியாக ஆடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில் சிம்பாப்வே அணி 19.3ஆவது ஓவரில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றியிலக்கைக் கடந்து 182 ஓட்டங்களைப் பெற்றது.

இதனால் அந்த அணி 6 விக் கெட்டுகளால் வெற்றியை ருசித்தது.

கடைசியாகக் களமிறங்கிய முன்யொங்கா 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் நின்றார்.

இலங்கை சார்பாக பந்துவிச்சில், துஷான் ஹெமந்த இரு விக்கெட்டுகளையும் தசுன் ஷானக, டுனித் வெல்லஹே ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக சிம்பாப்வே யின் சிகந்தர் ராசா தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் லீக் சுற்றில் பி பிரிவில் இரண்டாவது இடத்தில் இருந்த சிம்பாப்வே அணி, முதலிடத்தில் இருந்த இலங்கையை இரண்டாவது இடத்துக்குத் தள்ளிவிட்டு முதலிடத்தைப் பிடித்தது.

பி பிரிவில் சிம்பாப்வே அணி தாம் எதிர்கொண்ட 4 போட்டிக ளில் மூன்றில் வெற்றியும், அயர் லாந்துடனான போட்டி மழையால் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.






# செயற்கை நுண்ணறிவு அறிவினை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவோம்

## டில்லி மாநாட்டில் பிரதமர் மோடி உறுதி

செயற்கைநுண்ணறிவு(ஏ.ஐ.)தொழில் நுட்பத்தை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்று டில்லியில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ) உச்சி மாநாடுகடந்த16ஆம்திகதிதொடங்கியது. 4 ஆம் நாளான நேற்று ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குட்டெர்ஸ், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான், பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா, இலங்கை அநுரகுமார திஸாநாயக்க உட்பட 20 நாடுகளின் தலைவர்கள், 100 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களின் தலைமை செயல் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றுகையில்,

“வேளாண்மை, பாதுகாப்பு, மாற்றுத் திறனாளிகளுக்கான உதவிகள், பல் வேறு மொழிகளை அவரவர் விரும்பும் மொழியில்மொழிபெயர்க்கும்தொழில்நுட் பம் என பல்வேறு சவால்களுக்கு டில்லி ஏஜ உச்சி மாநாட்டில் மிகச் சிறந்த தீர்வு கள் வழங்கப்பட்டுள்ளன. ‘இந்தியாவில் தயாரிப்போம்’ திட்டத்தில் உருவாக்கப் பட்ட ஏஜ தொழில்நுட்பங்கள் மற்றும் இந்தியாவின் புதுமை கண்டுபிடிப்புகள் மாநாட்டில் இடம்பெற்றுள்ளன.

அணுசக்தியை ஆக்கப்பூர்வமாக வும் பயன்படுத்தலாம். அழிவுக்கும் பயன் படுத்தலாம். அதுபோலத்தான் ஏ.ஐ. தொழில்நுட்பமும். இதை ஆக்கப்பூர் வமாக பயன்படுத்தினால் பல பிரச்சினை களுக்கு சிறந்த தீர்வு காண முடியும். அழிவுக்கு பயன்படுத்தினால் மிகப்பெரிய பாதிப்புகள் ஏற்படும். மனிதகுலத்துக்கு பலன் அளிக்கும் வகையில் மட்டுமே ஏஜ தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். அனைவருக்கும் நன்மை, அனைவருக்கும் மகிழ்ச்சி என்ற கருத்தை முன்னிறுத்தியே இந்த மாநாடு நடத்தப் படுகிறது.

சில நாடுகள் சுயநலனுடன் செயல்படு கின்றன. ஆனால் இந்தியாவின் அணுகு முறை வேறுபட்டது. ஏ.ஐ. மூலம் ஒட்டு மொத்த உலகமும் பயன் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஏ.ஐ. தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படும் டீப் ஃபேக் காணொலி, ஒலிகள், புகைப் படங்கள் மிகப்பெரிய சவாலாக உருவெ டுத்து வருகின்றன. இதை தடுத்துநிறுத்த வேண்டும். உணவுப் பொருள் பாக்கெட் டில் என்னென்ன ஊட்டச்சத்துகள் உள் ளன என்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டுள் ளதைப் போல டிஜிட்டல் உலகில் எது உண்மையான காணொலி, எது ஏ.ஐ. தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட காணொலி என்பது தெளிவாக குறிப் பிடப்பட வேண்டும். ஏ.ஜ. காணொலி, புகைப்படங்களை ‘வாட்டர்மார்க்’ குறியீடு மூலம் அடையாளம் காட்ட வேண்டும்.

சிறார் நலன், பாதுகாப்பு ஏ.ஐ. தொழில் நுட்ப விவகாரத்தில் சிறாரின் நலன் கள், பாதுகாப்பை கருத்தில் கொள்ள வேண்டும். புதிய தொழில்நுட்பத்தால் சிறாரின் நலன்களுக்கு எவ்வித பாதிப் பும் ஏற்படக் கூடாது. டில்லி மாநாட்டில் 3 இந்திய நிறுவனங்கள் தங்களது ஏ.ஐ. தொழில்நுட்ப மாதிரிகள், செயலிகளை அறிமுகம் செய்துள்ளன. இவை இந்திய இளைஞர்களின் திறமையை வெளிப் படுத்துகின்றன. உலகம் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களுக்கு இந்திய இளை ஞர்கள் தீர்வுகளை வழங்குகின்ற னர்.

சில நாடுகள் சுயநலனுடன் செயல்படுகின்றன. ஆனால் இந்தியா வின் அணுகுமுறை வேறுபட்டது. ஏ.ஐ. மூலம் ஒட்டுமொத்த உலகமும் பயன் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். ஏ.ஐ. தொழில்நுட்பத் தால் உருவாக்கப்படும் டீப் ஃபேக் காணொலி, ஒலிகள், புகைப்படங்கள் மிகப்பெரிய சவாலாக உருவெடுத்து வருகின்றன. இதை தடுத்துநிறுத்த வேண்டும். உணவுப் பொருள் பாக்கெட் டில் என்னென்ன ஊட்டச்சத்துகள் உள் ளன என்ற விவரங்கள் குறிப்பிடப்பட் டுள்ளதைப் போல டிஜிட்டல் உலகில் எது உண்மையான காணொலி, எது ஏ.ஐ. தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட காணொலி என்பது தெளிவாக குறிப்பி டப்பட வேண்டும். ஏஜ வீடியோ, புகைப் படங்களை ‘வோட்டர்மார்க்’ குறியீடு மூலம் அடையாளம் காட்ட வேண்டும்.

சிறார் நலன், பாதுகாப்பு ஏ.ஐ. தொழில் நுட்ப விவகாரத்தில் சிறாரின் நலன் கள், பாதுகாப்பை கருத்தில் கொள்ள வேண்டும். புதிய தொழில்நுட்பத்தால் சிறாரின் நலன்களுக்கு எவ்வித பாதிப் பும் ஏற்படக் கூடாது. டில்லி மாநாட்டில் 3 இந்திய நிறுவனங்கள் தங்களது ஏ.ஐ. தொழில்நுட்ப மாதிரிகள், செயலி களை அறிமுகம் செய்துள்ளன. இவை இந்திய இளைஞர்களின் திறமையை வெளிப்படுத்துகின்றன. உலகம் எதிர் கொள்ளும் பல்வேறு சவால்களுக்கு இந்திய இளைஞர்கள் தீர்வுகளை வழங்குகின்றனர்.” – என்றார்.

# தமிழ்நாடு முன்னேற இணைந்தோம்: தே.மு.தி.கவுக்கு ஸ்டாலின் வரவேற்பு



தமிழ்நாடு அனைத்து வகையி லும் முன்னேற இணைந்து பயணிப் போம் என தி.மு.க. கூட்டணியில் இணைந்துள்ள தே.மு.திகவை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்றுள்ளார்.

2026 இல் நடைபெறவிருக்கும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தே.மு.தி.க. யாரும் எதிர்பாராத நகர்வாக தி.மு.க. கூட்டணியில் இணைந்துள்ளது.

இந்நிலையில், இது குறித்து முதல் வர் ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில்,

“தலைவர் கலைஞர் மேல் மாறாத அன்பு கொண்டவரும், எனது அன்பு நண்பருமான ‘கேப்டன்’ விஜயகாந்த் உருவாக்கிய தேசிய முற்போக்கு திராவிட கழகம், இன்று மதச்சார்பற்ற முற்போக் குக் கூட்டணியில் இணைந்திருப்பது பெருமகிழ்ச்சி அளிக்கிறது.

சகோதரர் கேப்டன் உருவாக்கிய இயக்கத்தைத் தற்போது திறமையாக வழிநடத்தி வரும் பொதுச்செயலாளர் அன்புச் சகோதரி பிரேமலதா விஜயகாந் தையும், அக்கட்சியின் நிர்வாகிகளையும் வருக வருக என வரவேற்கிறேன்.

கறுப்பு சிவப்பைக் கொடியில் தாங் கியிருக்கும் தங்களது நல்வரவு – நல்லு றவு தொடர்ந்து தமிழ்நாட்டின் உயர்வுக் குப் பங்களிக்கட்டும். திராவிட மொடல் ஆட்சி தொடரவும், தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறவும் இணைந்து பயணிப்போம். வெல்வோம் ஒன்றாக.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய கிழக்கில் பதற்றம் அமெரிக்க படைகள் குவிப்பு



மத்திய கிழக்கில் மிகப் பெரிய அளவில் அமெரிக்கா படைகளை குவித்து வருவதாகவும், ஈரான் மீது போர் தொடுக்க ட்ரம்ப் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

ஈரானின் பொருளாதார வீழ்ச்சி, மதக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டவற்றுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். போராட்டக்காரர்களை ஒடுக்க அரசு பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிட்டது. இதன் காரணமாக, இரு தரப்பிலும் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டன. மக்களின் போராட்டத்தை ஒடுக்கும் ஈரான் அரசுக்கு ட்ரம்ப் கடும் கண்டனம் தெரிவித்தார். மேலும், போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளிப்பதாகவும் கூறினார்.

இந்நிலையில், ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடுவதாகவும், இதற்காக யுரேனியத்தை செறிவூட்டுவதாகவும் அமெரிக்கா குற்றம் சாட்டியது. யுரேனிய செறிவூட்டலை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பாக இரு தரப்புக்கும் இடையே ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான பேச்சுவார்த்தை இந்த வாரம் ஜெனீவாவில் நடைபெற்றது. இதில், ஈரான் மற்றும் அமெரிக்க உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்த பேச்சுவார்த்தைகளில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் எனினும், சில பிரச்சினைகளில் சிக்கல் நீடிப்பதாகவும் வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரோலின் லீவிட் தெரிவித்திருந்தார்.

இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் இருக்க, மத்திய கிழக்கில் அமெரிக்கா தனது படைகளை குவித்து வருகிறது. 2003 இல் ஈராக்குக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கா இப்பகுதியில் படைகளை குவித்தது. அதன் பிறகு தற்போது தனது படைகளை அதிக அளவில் குவித்து வருகிறது. ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை எப்போது வேண்டுமானாலும் தொடங்கலாம் என்பதையே இது காட்டுவதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆக்சியோஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. ஈரானுக்கு எதிரான இந்த ராணுவ நடவடிக்கை வாரக்கணக்கில் விரிவடையும் என்றும் முழு அளவிலான போரைப் போன்று இருக்கும் என்றும் ஆக்சியோஸ் குறிப்பிட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தப் பிராந்தியத்தில் அமெரிக்கா மேற்கொள்ளும் மிகப் பெரிய தாக்குதலாக இது இருக்கப் போகிறது என்று வால் ஸ்ட்ரீட் ஜர்னல் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வால் ஸ்ட்ரீட் ஜர்னல் வெளியிட்டுள்ள செய்தியில், 'மத்திய கிழக்கு நோக்கி தனது அதிநவீன கு-35, கு-22 ஜெட் போர் விமானங்களை அமெரிக்கா நகர்த்தி வருகிறது. ருளுளு ஆபிரகாம் லிங்கன் போர் கப்பல் ஏற்கனவே ஈரான் கடற்கரையின் எல்லைக்குள் செயல்பட்டு வரும் நிலையில், இரண்டாவது விமானம் தாங்கி கப்பலான ருளுளு ஜெரால்ட் ஆர். ஃபோர்டு இந்தப் பிராந்தியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகளும் இங்கே நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

ஈரான் மீது தாக்குதல் நடத்த ட்ரம்ப் உத்தரவிடுவாரா என்பது இன்னும் நிச்சயமற்றதாகவே உள்ளது. தாக்குதல் நடத்த அவர் முடிவு செய்தால், அது ஈரான் ஆட்சிக்கும் அதன் பிராந்திய பிரதிநிதிகளுக்கும் கடும் சேதத்தை ஏற்படுத்தும். ஈரானின் அரசியல் மற்றும் இராணுவத் தலைவர்களை குறிவைப்பதாக இந்த தாக்குதல் இருக்கும். ஈரானில் ஆட்சி மாற்றத்தை இது ஏற்படுத்தும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸிம்பாப்வே முன்னாள் ஜனாதிபதி ரொபர்ட் முகாபேயின் மகன் கைது

ஸிம்பாப்வேயின் முன்னாள் ஜனாதிபதி ரொபர்ட் முகாபேயின் இளைய மகன் பெல்லார்மைன் சட்டுங்கா முகாபே (வயது 28) தென்னாபிரிக்காவில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஜோகன்னஸ்பேர்க்கில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் அவர் தென்னாப்பிரிக்க பொலிஸாரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவம் ஜோகன்னஸ்பேர்க்கில் அமைந்துள்ள முகாபேயின் இல்லத்தில் இடம்பெற்றுள்ளது

அந்த வீட்டில் பணிபுரிந்த 23 வயது இளைஞரே துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளார்.

அவர் தற்போது ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.



இந்தநிலையில், கொலை முயற்சி வழக்காக இதைக் கருதி காவல் துறை விசாரணை நடத்தி வருகிறது.

ரொபர்ட் முகாபே ஸிம்பாப்வேயை 37 ஆண்டுகள் ஆட்சி செய்தவராவார்.

2017 இல் பதவியிலிருந்து விலக்கப்பட்டார். பின்னர் 2019 ல் தனது 95 ஆவது வயதில் காலமானார்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.02.2025




உங்கள் முயற்சிகளில் வளர்ச்சியும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகையில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல்திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள். இன்று அமைதியாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகு முறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்தையும் பொறுமையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். அனுசரணையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகினால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும்.

கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கையான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. உங்கள் தேவைகளை சமாளிக்க சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.

இன்று ஆற்றல் அதிகமாகக் காணப்படும்.




இன்று சாதகமான நாளாக அமையாது. மனதை ஓய்வாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதட்டமாக காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.02.2025




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப்பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது. நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை அனுபவிக்க இயலாது.

இன்று மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்.




உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர்கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பணியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணம் குறைந்து காணப்படும். குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். பணத்தை சேமிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசுவீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.

# வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த 2 மோட்டார் சைக்கிள்கள் தீக்கிரை!

## சாவகச்சேரி தபால் நிலைய வீதியில் சம்பவம்





**(த.சுபேசன்)**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தபால் நிலைய வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு வீடொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் இனந்தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. அத்துடன் வீட்டுக் கண்ணாடி உள்ளிட்ட பொருள்களும் அடித்து சேதமாக்கப்பட்டிருக்கின்றன என சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



ஓய்வூதியர் ஒருவருடைய வீடு ஒன்றிலேயே இவ்வாறு அசம்பாவிதம் இடம்பெற்றுள்ள நிலையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.